ASTROBHAVA

SACRED HYMN · TAMIL WITH MEANING

Shanmuga Kavasam

Pamban Kumaragurudasa Swamigal

THE COMPLETE HYMN · TAMIL

Thirty verses, one for each letter of the Tamil alphabet from a to the final na, in the metrical word-division of the edition printed in the author's lifetime. The printed closing line is given at the end.

VERSE 1

அண்டமா யவனி யாகி யறியொணாப் பொருள தாகித்
தொண்டர்கள் குருவு மாகித் துகளறு தெய்வ மாகி
எண்டிசை போற்ற நின்ற வென்னரு ளீச னான
திண்டிறற் சரவ ணத்தான் றினமுமென் சிரசைக் காக்க

He became the universe and the earth, the reality no one can fully know, the guru of his devotees and the flawless God. May the mighty one born in the Saravana pool, the gracious Lord praised in all eight directions, guard my head every day.

VERSE 2

ஆதியாங் கயிலைச் செல்வ னணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் றானிரு நுதலைக் காக்க
சோதியாந் தணிகை யீசன் றுரிசிலா விழியைக் காக்க
நாதனாங் கார்த்தி கேய னாசியை நயந்து காக்க

May the primal Lord of Kailasa guard my forehead, and may he who wears the kadamba garland with opening blossoms guard my two brows. May the radiant Lord of Tiruttani guard my clear eyes, and may Karttikeya, the master, lovingly guard my nose.

VERSE 3

இருசெவி களையுஞ் செவ்வே ளியல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நாப்பன் முழுதுநற் குமரன் காக்க
துரிசறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ர மணியன் காக்க

May Sevvel, the red Lord, kindly guard both my ears, and may Murugavel guard my mouth. May the good Kumaran guard my tongue and all my teeth, the brother of the elephant-faced Ganesha guard my cheeks, and Sivasubramanya guard the nape of my neck.

VERSE 4

ஈசனாம் வாகு லேய னெனதுகந் தரத்தைக் காக்க
தேசுறு தோள்வி லாவுந் திருமகண் மருகன் காக்க
ஆசிலா மார்பை யீரா றாயுதன் காக்க வென்றன்
ஏசிலா முழங்கை தன்னை யெழிற்குறிஞ் சிக்கோன் காக்க

May the Lord Vahuleya, nursed by the Krittika stars, guard my throat, and may the nephew of Lakshmi guard my bright shoulders and my sides. May the bearer of twelve weapons guard my spotless chest, and may the handsome lord of the Kurinji hills guard my elbows.

VERSE 5

உறுதியாய் முன்கை தன்னை யுமையிள மதலை காக்க
தறுகணே றிடவே யென்கைத் தலத்தைமா முருகன் காக்க
புறங்கையை யயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்குமான் மருகன் காக்க பின்முது கைச்சேய் காக்க

May Uma's young child guard my forearms, and may great Murugan guard my palms so that I stand without fear. May the bearer of the spear guard the backs of my hands, the shining nephew of Vishnu guard my ten fingers, and the divine Son guard my back.

VERSE 6

ஊணிறை வயிற்றை மஞ்ஞை யூர்தியோன் காக்க வம்புத்
தோணிமிர் சுரேச னுந்திச் சுழியினைக் காக்க குய்ய
நாணினை யங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியைக் கந்தன் காக்க வறுமுகன் குதத்தைக் காக்க

May the rider of the peacock guard my belly, and may the Lord of the gods with lofty shoulders guard my navel. May the son of Agni and Gauri guard my private parts, may Skanda guard the organ of generation, and may the six-faced one guard the lowest part of my body.

VERSE 7

எஞ்சிடா திடுப்பை வேலுக் கிறைவனார் காக்க காக்க
அஞ்சக னமொரி ரண்டு மரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருட்காங் கேயன் விளரடித் தொடையைக் காக்க
செஞ்சர ணேச வாசான் றிமிருமுன் றொடையைக் காக்க

May the Lord of the spear guard my waist, leaving nothing out, and may the son of Shiva guard both my hips. May Gangeya guard the backs of my thighs, and may the beloved teacher of the red feet guard the fronts of my thighs.

VERSE 8

ஏரகத் தேவ னென்றா ளிருமுழங் காலுங் காக்க
சீருடைக் கணைக்கா றன்னைச் சீரலை வாய்த்தே காக்க
நேருடைப் பரடி ரண்டு நிகழ்பரங் கிரியன் காக்க
சீரிய குதிக்கா றன்னைத் திருச்சோலை மலையன் காக்க

May the Lord of Swamimalai guard my two knees, and may the Lord of Tiruchendur guard my shins. May the Lord of Tirupparankundram guard my two ankles, and may the Lord of Pazhamudircholai guard my heels.

VERSE 9

ஐயுறு மலையன் பாதத் தமர்பத்து விரலுங் காக்க
பையுறு பழநி நாத பரனகங் காலைக் காக்க
மெய்யுடன் முழுது மாதி விமலசண் முகவன் காக்க
தெய்வநா யகவி சாகன் றினமுமென் னெஞ்சைக் காக்க

May the Lord of the lovely hills guard the ten toes set on my feet, and may the supreme Lord of Palani guard my soles. May the pure primal Shanmukha guard my whole body, and may Visakha, the Lord of the gods, guard my heart every day.

VERSE 10

ஓலியெழ வுரத்த சத்தத் தொடுவரு பூதப் ரேதம்
பலிகொளி ராக்க தப்பேய் பலகணத் தெவையா னாலுங்
கிலிகொள வெனைவேல் காக்க கெடுபரர் செய்யுஞ் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடா தயில்வேல் காக்க

Whatever spirits come with loud and fearful cries, ghosts, demons who take offerings, fiends of every band, may the spear guard me and make them flee in fear. May the sharp spear guard me so that sorcery done by harmful foes and powerful spells and rites cannot hurt me.

VERSE 11

ஓங்கிய சீற்ற மேகொண் டுவணிவில் வேல்சூ லங்கள்
தாங்கிய தண்ட மெஃகந் தடிபர சீட்டி யாதி
பாங்குடை யாயு தங்கள் பகைவரென் மேலே யோச்சின்
தீங்குசெய் யாம லென்னைத் திருக்கைவேல் காக்க காக்க

If enemies in rising fury hurl at me bows, spears, tridents, maces, steel blades, clubs, axes, lances and every other weapon, may the spear in the Lord's holy hand guard me so that they do me no harm.

VERSE 12

ஒளவிய முளரூ னுண்போ ரசடர்பே யரக்கர் புல்லர்
தெவ்வர்க ளெவரா னாலுந் திடமுட னெனைமற் கட்டத்
தவ்வியே வருவா ராயிற் சராசர மெலாம்பு ரக்குங்
கவ்வுடைச் சூர சண்டன் கையயில் காக்க காக்க

The envious, flesh-eaters, fools, demons, rakshasas, base men and enemies, whoever they are, if they rush at me to bind me by force, may the spear in the hand of the great slayer of Sura, who protects all moving and unmoving beings, guard me.

VERSE 13

கடுவிடப் பாந்தள் சிங்கங் கரடிநாய் புலிமா யானை
கொடியகோ ணாய்கு ரங்கு கோலமார்ச் சாலஞ் சம்பு
நடையுடை யெதனா லேனு நானிடர்ப் பட்டி டாமற்
சடுதியில் வடிவேல் காக்க சானவி முளைவேல் காக்க

Venomous snakes, lions, bears, dogs, tigers, horses, elephants, cruel wild dogs, monkeys, striped cats, jackals, and any creature that walks, so that I come to no harm from them, may the sharp spear swiftly guard me, the spear of the son of Ganga.

VERSE 14

ஙகரமே போற்ற ழீஇ ஞானவேல் காக்க வன்புள்
சிகரிதே ணண்டுக் காலி செய்யனே றாலப் பல்லி
நகமுடை யோந்தி பூரா னளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை யிவையா லெற்கோ ரூறிலா தைவேல் காக்க

May the spear of wisdom, embracing me as the curve of the letter nga does, guard me. From fierce birds, scorpions, crabs, centipedes, red-backed creatures, house lizards, clawed chameleons, beetles and other stinging insects on this earth, may the fine spear keep me free of every hurt.

VERSE 15

சலத்திலுய் வன்மீ னேறு தண்டுடைத் திருக்கை மற்றும்
நிலத்திலுஞ் சலத்தி லுந்தா னெடுந்துயர் தரற்கே யுள்ள
குலத்தினா னான்வ ருத்தங் கொண்டிடா தவ்வவ் வேளை
பலத்துட னிருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க

From fish that live in the water, the stingray with its tail, and every kind of creature on land or in water that can cause long suffering, may I come to no pain. At every such time may the Lord stay near me in strength and guard me, and may the keen spear of the son of Agni guard me.

VERSE 16

ஞமலியம் பரியன் கைவே னவக்கிர கக்கோள் காக்க
சுமவிழி நோய்க டந்த சூலையாக்கிராண ரோகம்
திமிர்கழல் வாதஞ் சோகை சிரமடி கர்ண ரோகம்
எமையணு காம லேபன் னிருபுயன் சயவேல் காக்க

May the spear of the Lord who rides the peacock guard me from the nine planets. Eye diseases, colic, illness of the nose, numbness, rheumatism, anaemia, and diseases of the head and ears: may the victorious spear of the twelve-armed one keep them from coming near us.

VERSE 17

டமருகத் தடிபோ னைக்குந் தலையிடி கண்ட மாலை
குமுறுவிப் புருதி குன்மங் குடல்வலி யீழை காசம்
நிமிரொணா திருத்தும் வெட்டை நீர்ப்பிர மேக மெல்லாம்
எமையடை யாம லேகுன் றெறிந்தவன் கைவேல் காக்க

Headache that pounds like the beat of a drum, swellings of the neck, rumbling abscesses, abdominal tumours, pain in the bowels, asthma, cough, discharges that keep one from standing upright, and diabetes: may the spear of the one who split the mountain keep them all from reaching us.

VERSE 18

இணக்கமில் லாத பித்த வெரிவுமா சுரங்கள் கைகால்
முணக்கவே குறைக்குங் குஷ்ட மூலவெண் முளைதீ மந்தஞ்
சணத்திலே கொல்லுஞ் சன்னி சாலமென் றறையு மிந்தப்
பிணிக்குல மெனையா ளாமற் பெருஞ்சத்தி வடிவேல் காக்க

Bile disorders that give no rest, burning fevers, leprosy that wastes the hands and feet, piles, white growths, failing digestion, and the convulsive fever that kills in a moment and is called deadly: may the great Shakti spear keep this whole host of diseases from ruling over me.

VERSE 19

தவனமா ரோகம் வாதஞ் சயித்திய மரோச கம்மெய்
சுவறவே செய்யு மூலச் சூடிளைப் புடற்று விக்கல்
அவதிசெய் பேதி சீழ்நோ யண்டவா தங்கள் சூலை
எவையுமென் னிடத்தெய் தாம லெம்பிரான் றிணிவேல் காக்க

Wasting thirst, wind disorders, chills, loss of appetite, the heat of piles that dries the body, breathlessness, distressing hiccups, painful dysentery, festering sores, hernia and colic: may the firm spear of my Lord keep every one of them from reaching me.

VERSE 20

நமைப்புறு கிரந்தி வீக்க நணுகிடு பாண்டு சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை யாகுபஃ றொழுநோய் கக்கல்
இமைக்குமுன் னுறுவ லிப்போ டெழுபுடைப் பகந்த ராதி
இமைப்பொழு தேனு மென்னை யெய்தாம லருள்வேல் காக்க

Itching eruptions, swelling, creeping anaemia, dropsy, the many kinds of dark and white skin disease, vomiting, sudden fits, fistula and the like: may the gracious spear keep them from reaching me even for the blink of an eye.

VERSE 21

பல்லது கடித்து மீசை படபடென் றேது டிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சங் காட்டியே யுருட்டி நோக்கி
எல்லினுங் கரிய மேனி யெமபடர் வரினு மென்னை
ஒல்லையிற் றார காரி ஓம்ஐம் ரீம்வேல் காக்க

Even if the messengers of Yama come, grinding their teeth with moustaches twitching, showing hearts harder than stone, rolling their eyes, their bodies darker than night, may the spear of the foe of Taraka, the spear of Om Aim Hrim, swiftly guard me.

VERSE 22

மண்ணிலு மரத்தின் மீது மலையிலு நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதுஞ் சாரிசெய் யூர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தி னுள்ளும் வேறெந்த விடத்து மென்னை
நண்ணிவந் தருளார் சஷ்டி நாதன்வேல் காக்க காக்க

On the ground, in the trees, on the mountains, in fire, on cool waters, on moving vehicles, in the sky, in caves under the earth, or in any other place, may the spear of the gracious Lord of the Shashti come close and guard me.

VERSE 23

யகரமே போற்சூ லேந்து நறும்புயன் வேன்முன் காக்க
அகரமே முதலா மீரா றம்பகன் வேல்பின் காக்க
சகரமோ டாறு மானோன் றன்கைவே னடுவிற் காக்க
சிகரமின் றேவ மோலி திகழைவேல் கீழ்மேல் காக்க

May the spear of the Lord with fragrant shoulders, who holds a trident shaped like the letter ya, guard my front, and the spear of the twelve-eyed one, first like the letter a, guard my back. May the spear of the one who is the six letters beginning with sa guard my middle, and the bright spear of the Lord whose crown shines over the gods guard me below and above.

VERSE 24

ரஞ்சித மொழிதே வானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல்கி ழக்கிற் றிறமுடன் காக்க வங்கி
விஞ்சிடு திசையின் ஞான வீரன்வேல் காக்க தெற்கில்
எஞ்சிடாக் கதிர்கா மத்தோ னிகலுடைக் கரவேல் காக்க

May the red victorious spear of the Lord of Devayanai, whose speech delights, and the consort of Valli, ably guard me in the east. May the spear of the hero of wisdom guard me in the south-east, the direction of Agni, and may the battle spear of the Lord of Kathirkamam, who never fails, guard me in the south.

VERSE 25

லகரமே போற்கா ளிங்க னல்லுட னெளிய நின்று
தகரமர்த் தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்
நிகழெனை நிருதி திக்கி னிலைபெறக் காக்க மேற்கில்
இகலயில் காக்க வாயு வினிற்குகன் கதிர்வேல் காக்க

May the spear of the nephew of Hari, who stood upon the serpent Kaliya, twisting its body like the letter la, and crushed it, guard me firmly in the south-west. May the battle spear guard me in the west, and the shining spear of Guha guard me in the north-west, the direction of Vayu.

VERSE 26

வடதிசை தன்னி லீசன் மகனருட் டிருவேல் காக்க
விடையுடை யீசன் றிக்கில் வேதபோ தகன்வேல் காக்க
நடக்கையி லிருக்கு ஞான்று நவில்கையி னிமிர்கை யிற்கீழ்க்
கிடக்கையிற் றூங்கு ஞான்று கிரிதுளைத் துளவேல் காக்க

May the holy spear given in grace by the son of Shiva guard me in the north, and the spear of the teacher of the Vedas guard me in the north-east, the direction of the Lord who rides the bull. While I walk, sit, speak, rise, lie down or sleep, may the spear that pierced the mountain guard me.

VERSE 27

இழந்துபோ காத வாழ்வை யீயுமுத் தையனார் கைவேல்
வழங்குநல் லூணுண் போது மால்விளை யாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்துநெஞ் சடக்கும் போதுஞ்
செழுங்குணத் தோடே காக்க திடமுடன் மயிலுங் காக்க

May the spear in the hand of Muthaiyan, who grants a life that is never lost, guard me with its rich goodness while I eat good food, while I take my pleasures, and while I bow at the feet praised by the ancient gods and still my heart. May the peacock too guard me firmly.

VERSE 28

இளமையில் வாலி பத்தி லேறிடு வயோதி கத்தில்
வளரறு முகச்சி வன்றான் வந்தெனைக் காக்க காக்க
ஒளியெழு காலை முன்னெ லோஞ்சிவ சாமி காக்க
தெளிநடு பிற்ப கற்கால் சிவகுரு நாதன் காக்க

In childhood, in youth and in the old age that comes on, may the six-faced Shiva come and guard me. In the bright early morning may Om Sivasami guard me, and at clear midday and in the afternoon may Sivagurunathan guard me.

VERSE 29

இறகுடைக் கோழித் தோகைக் கிறைமுனி ராவிற் காக்க
திறலுடைச் சூர்ப்ப கைத்தே திகழ்பினி ராவிற் காக்க
நறவுசேர் தாட்சி லம்ப னடுநிசி தன்னிற் காக்க
மறைதொழு குழக னெங்கோன் மாறாது காக்க காக்க

In the early night may the Lord of the feathered cock and the peacock guard me, and in the late night may the foe of mighty Sura guard me. At midnight may he of the honeyed feet with ringing anklets guard me, and may the youthful one worshipped by the Vedas, our King, guard me without fail.

VERSE 30

இனமெனத் தொண்ட ரோடு மிணக்கிடுஞ் செட்டி காக்க
தனிமையிற் கூட்டந் தன்னிற் சரவண பவனார் காக்க
நனியனு பூதி சொன்ன நாதர்கோன் காக்க வித்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுடான் காக்க வந்தே

May the Lord who came as a merchant and joins his devotees as kin guard me, and may Saravanabhava guard me when I am alone and when I am among many. May the Lord of the master who sang the Anubhuti guard me, and may the God of the servant who lovingly spoke this hymn come and guard me.

CLOSING

சண்முககவச முற்றிற்று

Thus ends the Shanmuga Kavacham.

Read it on its page

The Shanmuga Kavasam with its meaning, how and when it is recited, and the same text in five more scripts: astrobhava.com/mantra/shanmuga-kavasam/



PERFORMED FOR YOU

The Subramanya Homam, in your name

At our Yagna Ashram, telecast live · astrobhava.com/product/subramanya-homa/

Book →

AstroBhava · www.astrobhava.com · support@astrobhava.com · +91 96295 55442
An initiative of Vedhon Management Consultants (OPC) Pvt Ltd, Pollachi